# சிந்தனை

— சகோதரி. நிஜா கென்னடி



ஒரு மனிதனுடைய நினைவுகள் எப்படியோ அப்படித்தான் அவன் வாழ்க்கையும் இருக்கும். நல்ல யோசனைகள், எண்ணங்கள், நினைவுகள், சிந்தனைகள், கற்பனைகள் இருப்பவர்களுடைய வாழ்க்கை செழிப்புள்ளதாய் இருக்கும். ஏனென்றால் நாம் எதை சிந்திக்கிறோமோ, அதைத்தான் செயல்படுத்துவோம். எதை விதைக்கிறோமோ அதைத்தான் அறுக்க முடியும். நெல்லை விதைத்து விட்டு கோதுமையை அறுக்க முடியாது. கடுகை விதைத்து விட்டு கேழ்வரகை அறுக்க முடியாது. தீய சிந்தனைகள் நம்மை பாவத்துக்கு நேராக கொண்டுபோய்விடும். உதாரணமாக பணத்தின் மேல் ஆசையுள்ளவர்கள் குறுக்கு வழியில் சம்பாதிப்பதற்காக பாவசெயல்களில் ஈடுபடுவார்கள். கடைசியில் அந்த பாவத்திற்கான தண்டனைக்குள்ளாவார்கள். இந்த பரிதாபமான நிலைமை வந்ததற்கு மூலகாரணமே, பிறப்பிடமே அவர்களது தீய சிந்தனைதான்.



உங்களுக்குத் தெரிந்த சிலர் தீய சிந்தனையுள்ளவர்களாகவும்,அதை செய்பவர்களாகவும் இருக்கலாம். அதே சமயத்தில் நல்லதொரு வசதியான வாழ்க்கை வாழ்பவராகவும் காணப்படலாம். உண்மையில் நடப்பது என்னவென்றால், இந்த உலகத்தின் சட்ட திட்டங்களை அவர்கள் ஏமாற்றிக்



கொண்டிருக்கிறார்கள். ஆனால், தேவனுடைய கோபத்திலிருந்து அவர்கள் தப்புவித்துக் கொள்ளமுடியாது. அப்படிப்பட்டவர்களுடைய முடிவு கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது. இந்த உலகத்தையும், நம்மையும் உண்டாக்கின கர்த்தரை ஒருவரும் ஏமாற்ற முடியாது.

## தேவனை புறக்கணித்தல்

**அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.**

**- ரோமர் 1:21**

தேவஜனங்கள் தேவனைப் பற்றி அறிந்திருந்தும், அவரை விட்டு பின்வாங்கி பாவத்தில் வாழ்வதைப் பார்த்து தேவன் வேதனைப்படுகிறார். தேவனுக்குரிய கனத்தை (நம்மை சிருஷ்டித்தவர்) அவர்கள் கொடுக்காமல், கர்த்தர் அவர்களது வாழ்க்கையில் செய்த நன்மைகளை நினைத்து நன்றி சொல்லி மகிமைப்படுத்தாமல், வீணான ஒன்றுக்கும், பிரயோஜனமற்ற காரியங்களைக் குறித்து சிந்தித்து, பயனற்ற எண்ணங்களினால் நிறைந்து, தேவன்மீது நம்பிக்கையற்று இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுடைய நினைவுகளில் இருள் நிறைந்திருக்கிறது. வீணாகக் கற்பனை செய்து, சிந்தித்து தங்களது சுய யோசனைகளினால் அறிவில்லாமல், அற்பத்தனமான காரணங்களுக்காக சண்டை போட்டு, சட்டங்களைப் பேசி, விவாதம் செய்து, புத்தியீனமாக தீவிரமாக சிந்தனை செய்வதினால் அவர்களது இருதயம் இருளடைகிறது.

இப்படிப்பட்டவர்களை கர்த்தர் அவர்கள் சுய எண்ணங்களின்படி, சுய இஷ்டப்படியே செய்ய விட்டுவிடுவார். கர்த்தருக்கு பிரியமான வழியில் நடக்க அவர்களுக்கு விருப்பமில்லாததினால் அவர்கள் வாழ்க்கையில் கஷ்டங்களையும், துன்பங்களையும், நிம்மதியின்மையையும் அனுபவிப்பார்கள். கர்த்தருக்கு பிரியமில்லாத தீமையான காரியங்களை செய்வதினால் அதற்குரிய தண்டனையை அடைவதும், பின்வாங்கும்போதும் பொல்லாப்பு வரும். தீமை நம்மை சூழ்ந்து கொள்ளும். கர்த்தரை விட்டுவிட்டு மனிதர்களை உலக பொருட்களை, படிப்பை, புகழை, திறமைகளை, பதவியை செல்வாக்கை கர்த்தருடைய இடத்தில் வைப்பது கர்த்தரை புறக்கணிப்பதும், விக்கிரகாராதனையுமாகும். தேவன் நம்மை அவருடைய வழியில் ஆசீர்வாதத்திற்கு நேராக நடத்த விரும்புகிறார். நாம் மனந்திரும்பி மீண்டும் அவரிடம் வர தேவன் வாஞ்சையோடு காத்திருக்கிறார். ஆனால், நாம்தான் அவரை விட்டு விலகிப்போய் விக்கிரகாராதனை செய்பவர்களானோம். (1 கொரிந்தியர் 10:7). நாம் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும், நாம் உலகத்தாரல்ல. உலக ஜனங்கள் சிந்தனை செய்வதுபோல

நாம் சிந்திக்காமலும், அவர்களது யோசனையின்படி நடக்காமலும் அவர்களது வழியில் போகாமலும் அவர்களது செய்கையின்படி செய்யாமலும் நம்மை விலக்கி பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

**ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறார்.**

**- 1 கொரிந்தியர் 3:20**

உலக அறிவு படைத்தவர்கள், தேவனைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்என்ற வாஞ்சையில்லாதவர்களாய், அவரை அறிந்து கொள்ளாமல், தேவனுக்கு தங்கள் வாழ்க்கையில் முதலிடம் கொடுக்காமல், புறக்கணித்து விட்டு, தங்களையே பெரிதாகப் பார்ப்பார்கள். தங்களுக்காக யோசிக்கும் உண்டாக்கினவரை நோக்கிப் பார்க்காமல், சுயமாக திட்டங்களை யோசித்து அதன்படி செய்கிறார்கள். இவைகளெல்லாம் வீண் என்று கர்த்தர் அறிந்திருக்கிறார். தேவன்தான் நம்மை அனுதினமும் பாதுகாத்து, போஷித்து, சுகம், பெலன், சமாதானம் தருகிறவர். துன்பத்திலும், துயரத்திலும், போராட்டத்திலும், நம்மை தாங்குகிறவர். நீடிய ஆயுளை கொடுக்கிறவர். அநேகர், கர்த்தர் ஜீவனோடு இருக்கிறார், நம்மோடு கூட ஆவியாய் இருக்கிறார். நமக்குள் இருக்கிறார் என்பதை மறந்து விடுகிறார்கள். இயேசு கிறிஸ்து உயிரோடு இருக்கிறார் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும். வேத வார்த்தைகளை படிப்பதன் மூலமும், கேட்பதன் மூலமும், விசுவாசம் நமக்குள் வரும்.

## வீணான சிந்தனை

**ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்ற புறஜாதிகள், தங்கள் வீணான சிந்தனையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள்.**

**- எபேசியர் 4:17**

தேவனை சார்ந்திருக்காமல், அவரை விட்டு விலகியிருப்பவர்கள் சுயமாக சிந்தித்து, ஒன்றுக்கும் பயனற்ற வேண்டாத சிந்தனைகளால் நிறைந்து வாழ்வார்கள். ஏனென்றால், தேவனோடுகூட உள்ள ஐக்கியம் இல்லாததால், தேவனிடமிருந்து விலகி வீண் சிந்தனையுடையவர் களாயிருப்பார்கள். தன் தகுதி பற்றியும், தன்னைப் பற்றியும் தானே வீணாக பெருமை கொள்பவர்களும், தன் குறைந்த அறிவினால் விவாதம் செய்பவர்களும், தேவனை விட்டு, விலகியிருப்பவர்களுமாய் இருப்பார்கள். தன் சுய புத்தியின்மேல் சார்ந்திருப்பவர்களும், தன் அறிவின் மேலும்,தாலந்துகள் மேலும் பணத்தின் மேலும் நம்பிக்கை வைப்பவர்களும், தேவனை புறக்கணிப்பவர்களுமாய் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு, தேவனைக்குறித்து மற்றவர்களுக்கு சொல்லுபவர்களைப் பார்க்கும்போது,



அது அற்பத்தனமாகத் தோன்றும்.

தேவனை அறியாதவர்கள்தான் தேவன்மீது நம்பிக்கையற்றவர்களாக இருப்பார்கள். நல்ல மனப்பான்மை இல்லாதவர்களாய், தவறான செயல்களை செய்வதில் பிடிவாதமுடையவர்களாய், தங்கள் சிந்தனையில் அறிவற்றவர்களாய், தங்களை உயர்வாக எண்ணிக் கொண்டு (ரோமர் *12:16)* தற்பெருமையோடு, வீண் பகட்டோடு இருப்பார்கள். அவர்களது ஆன்மா வெற்றிடமாக, பயனற்றதாக இருக்கும். வாழ்க்கை வெறுமையானது என்ற நம்பிக்கையுடையவர்களாய் இருப்பார்கள். நாம் அவர்களைப்போல வாழக்கூடாது. அவர்களது சிந்தனைகள் பயனற்றவை. அவர்களது எண்ணங்களும், புரிந்து கொள்ளும் திறனும் இருளடைந்தது. அவர்கள், இரக்கமில்லாதவர்களாய், கடின இருதயமுள்ளவர்களாய், அன்பில்லாதவர்களாய், வேறுபட்ட எண்ணமுள்ளவர்களாய் இருப்பார்கள். தங்கள் அறியாமையினாலே, தேவனுடைய வழியைவிட்டு சுயவழியில் செயல்படுவார்கள். தங்களது சுய அறிவினாலும், புரிந்து கொள்ளும் திறனினாலும், தன்னிச்சையாக செயல்பட தயார் நிலையில் இருப்பார்கள்.

## புதிய மனுஷன், புதிய சிந்தனை

நாம், இயேசு கிறிஸ்துவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது, நாம் மறுபடியும் பிறக்கிறோம். நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டு நாம் புது மனுஷனாக *(2 கொரிந்தியர் 5:17)* பாவத்தை வெறுக்கிறவர்களாக மாறுகிறோம். நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டதுமன்றி, நமது நோக்கங்கள், எண்ணங்கள், சொற்கள், செயல்கள் ஆகியவையும் புதிதாகின்றன. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கோபாக்கினையின் பிள்ளைகள்; பாவத்தில் வாழ்பவர்கள். இவர்கள் இவ்வுலக வழக்கத்தின்படி மாம்ச இச்சையின்படி நடந்து, தனது மாம்சமும் மனதும் விரும்பியபடி செய்து மாம்ச சுபாவத்தின்படி வாழ்பவர்கள். இவர்கள், தேவனைத் தேடாமல், தங்கள் சுயவழியில் நடப்பவர்கள். தெய்வ பயம் இல்லாமல், தன் மனம் போல வாழ்பவர்கள். இவர்கள் தேவ கோபத்திற்கு உள்ளாகி, இந்த உலகத்தைவிட்டுப் போகும்போது நரகத்துக்குப் போவார்கள். இப்படிப்பட்டவர்களுடைய சிந்தனைகள் வீணானதால், நாம் இவர்களைப் போல சிந்திக்கவோ, வாழவோ கூடாது. இயேசு கிறிஸ்துவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுமுன் வாழ்ந்த பழைய வாழ்க்கை முறையை விட்டுவிடவேண்டும். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு (கொலோசெயர் *3:9)* - பொய் பேசுவது என்பது நமது சிந்தனையில்தான் ஆரம்பிக்கிறது. மிகைப்படுத்திக் கூறுவது, தவறான புள்ளி விவரங்களை அளிப்பது வதந்திகளைப் பரப்புவது ஆகியவையும் பொய்களே.

## மாம்சீக எண்ணங்களை மேற்கொள்வது

**அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்.**

**- ரோமர் 8:5**

மாம்சத்தின்படி நடக்கிறவர்கள், அழிந்துபோகின்ற உலக பிரகாரமான காரியங்களைக் குறித்தே சிந்திப்பார்கள். நாம் மாம்சத்தின்படி நடக்கிறோமோ, ஆவியின்படி நடக்கிறோமோ என்பதை நம்முடைய செயல்களே வெளிப்படுத்திவிடும். மாம்சத்தின் செயல்கள் (கலாத்தியர் 5:19-21) நம்மிடம் உண்டா என்பதை கவனித்து அவைகள் நம்மிடமிருந்தால் நாம் மனந்திரும்பிவிட வேண்டும். மனந்திருப்பியவர்களிடம் மாம்சத்தின் செயல்கள் வெளிப்பட்டால், அவர்கள் மறுபடியும் பாவத்தில் விழுந்துவிட்டார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

சிலர், பணத்தைக் குறித்தே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். சம்பாதித்த பணத்தை எப்படி சேமித்து வைப்பது என்றும், இன்னும் எப்படி சம்பாதிக்கலாம் என்றும், குறுக்கு வழியில் எப்படி சம்பாதிக்கலாம் என்றும் பணத்தை எப்படி பெருக்கலாம் என்றும், மற்றவர்களின் பணத்தை எப்படி அபகரிப்பது என்றும் யோசித்துக் கொண்டிருப்பார்கள்.

சிலர், எப்பொழுதும் தங்களைக் குறித்தும்,தங்களது எதிர்காலத்தைக் குறித்து மாத்திரமே யோசித்துக் கொண்டிருப்பார்கள். மற்றவர்களையோ, அவர்களது கஷ்டங்களைக் குறித்தோ கொஞ்சமும் யோசிப்பதில்லை. சிலர்,



மற்றவர்களுக்கு தீங்கு செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடிருக்கிறார்கள் (சங்கீதம் 56:5). இன்னும் சிலர், மற்றவர்களிடத்தில் குறை காண்பதிலேயே சிந்தனையாய் இருப்பார்கள். இயேசு கிறிஸ்துவையும் இப்படித்தான் பரிசேயரும், சதுசேயரும்,வேதபாரகரும் குற்றம் கண்டுபிடிப்பதிலேயே சிந்தையாய் இருந்தார்கள். சிலர், மற்ற மனுஷர்களை எப்படி பிரியப்படுத்துவது, அவர்களிடம் எப்படி நல்ல பெயர் வாங்குவது என்பதைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள்.

சிலர், எப்பொழுதும் மற்றவர்களைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். ஒரு குறிப்பிட்ட மனுஷனையோ, மனுஷியையோ, குடும்பத்தையோ, எப்படி வெட்கப்படுத்துவது, தாழ்த்துவது, புறக்கணிப்பது, தள்ளி வைப்பது, அவமானப்படுத்துவது, நிந்திப்பது என்பதையே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். இந்த சிந்தனை அவர்களைத்தான் தாழ்த்துமேயொழிய அவர்களுக்கு நன்மை செய்யாது. அவர்கள் யாரை தாழ்த்த வேண்டுமென்று நினைக்கிறார்களோ அவர்கள் ஒருவேளை நல்லவர்களாக இருக்கலாம் அல்லது தேவனுக்கு பிரியமானவர்களாக இருக்கலாம். அப்படி தேவனுக்கு பிரியமானவர்களாக, தேவ பக்தியுள்ளவர்களாக இருந்தால், தேவன் அவர்கள் பட்சத்தில் இருப்பார். உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம் (ஏசாயா 54:17) என்ற அவருடைய வாக்குத்தத்தத்தின்படி, அவர்களுக்கு எதிராக நிற்பவர்களின் சிந்தையையே தேவன், நிர்மூலமாக்கிப் போடுவார். நம்முடைய நினைவுகளை மாத்திரமல்ல, அந்த நினைவுகள் நமக்குள் எதனால் வந்தது என்ற நினைவுகளின் தோற்றத்தையும் நம் தேவன் அறிவார். அவர், ஒரு மனுஷன் அல்ல. மனுஷ அறிவிற்கும், ஞானத்திற்கும் அப்பாற்பட்ட சர்வ வல்லமையுள்ள தேவன். இதை படித்துக்கொண்டிருக்கும் பிரியமான சகோதர, சகோதரிகளே, உங்களுக்கு எதிராக யார் என்ன சிந்தித்தாலும், திட்டம் போட்டாலும் பேசினாலும் கவலைப்படாதிருங்கள். நம் பரம தகப்பன், அவர்களுடைய சிந்தனைகளை அறிவார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. நீங்கள், ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா, தேவாதி தேவனாம் உங்கள் பரம தகப்பனை சார்ந்துகொள்ளுங்கள். இப்பொழுதே அவரை நோக்கி ஜெபியுங்கள். உங்களுக்கு எதிராக இருக்கும் எல்லா சிந்தனைகளையும் ஒன்றுமில்லாமல் போகச் செய்வார் நம் பரம தகப்பன். அல்லேலூயா!



## ஆவிக்குரிய சிந்தை

ஆவியின்படி நடக்கிறவர்கள், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே

பாவங்கள் கழுவப்பட்டவர்கள். அப்படி மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டவர்கள், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று ஆவியானவரால் நடத்தப்படுகிறவர்கள். அவர்கள், வேதத்தைத் தியானிப்பதிலும், ஜெபத்திலும், அதிக நேரத்தை செலவழிப்பவர்கள். கர்த்தரைக் குறித்தும், கர்த்தர் அவர்களுடைய வாழ்க்கையில் செய்த நன்மைகளைக்குறித்தும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களை கர்த்தரண்டை நடத்துபவர்களாக இருப்பார்கள். தங்களது நேரத்தையும், தாலந்துகளையும் கர்த்தருக்காகப் பயன்படுத்துவார்கள். கர்த்தருடைய ஊழியத்திற்கு, ஏழை, எளிய ஜனங்களுக்குக் கொடுப்பவர்களாக இருப்பார்கள். இதுவே ஆவியின்படி நடப்பதாகும். நாம் ஆவியின்படி நடக்கும்போது, ஆவியின் கனிகளைக் கொடுப்பவர்களாக இருப்போம் (கலாத்தியர் *5:22-23*).

நாம், பாவத்திற்கு மரித்து தேவனுக்கென்று பிழைத்திருக்கிறோம் என்ற எண்ணமுடையவர்களாய் வாழும்போது பாவத்தை மேற்கொள்ளலாம். மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் (ரோமர் *8:6*).

## இருதயத்தின் அந்தரங்கங்களை அறியும் கர்த்தர்

**தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும்;**
**என்னை சோதித்து,என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும்.**

**- சங்கீதம் 139:23**

தாவீது, கர்த்தர் தன்னை ஆராய்ந்து அறிந்து கொள்ளும்படியும், தீய வழிக்கு தான் செல்லாதபடிக்கு, தேவனுக்கு பிரியமான வழியில் தன்னை நடத்தும்படியாக ஜெபிக்கிறான். கர்த்தாவே என்னை சோதித்து பாரும், என் இருதயத்தையும், மனதையும் புடமிட்டு பாரும் (சங்கீதம் *26:2*) என்றும் ஜெபிக்கிறான். தேவன் ஒவ்வொரு மனிதனின் எண்ணங்களையும், நினைவுகளையும், சுபாவங்களையும் அறிந்திருக்கிறார். மனிதனின் இருதயத்தின் அந்தரங்கங்களையும் அறிந்திருக்கிறாரே (சங்கீதம் *44:21*). வேதத்தை தியானிக்காமல் இருப்பவர்கள், தேவன் மீது அன்பற்றவர்களாகவும், தேவனுக்கு பயப்படாதவர்களாகவும் தங்களுக்கு நன்மையான காரியங்கள் நடக்க வேண்டும் என்பதற்காக மிகவும் நல்லவர்கள்போல இந்த உலகத்தில் வாழ்ந்தாலும், கர்த்தர்,தங்களைப் பார்க்கிறார், தங்கள் தீய செயல்களை, எண்ணங்களை அறிந்திருக்கிறார் என்ற உணர்வில்லாமல் இருப்பார்கள். ஆனால், கர்த்தர் ஒருவர் மாத்திரமே அவர்கள் தந்திரத்தையும், மகா கேடான இருதயத்தையும் அறிந்திருக்கிறார். மனிதர்களால் அதை அறிந்து கொள்ளமுடியாது. எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்? (எரேமியா *17:9*). கர்த்தரே ஒவ்வொருவரின் இருதயத்தை பார்க்கிறார், மனதை சோதித்து அறிகிறார். ஒவ்வொருவருக்கும் அவனவன் வழிகளுக்கும்,



செயல்களுக்கும் தக்க பலனைக் கொடுக்கிறார். உண்மையாய், நல்ல சிந்தனைகளுடன், கர்த்தருக்குப் பிரியமான வழியில் நடப்போருக்குக் கர்த்தர் சமாதானத்தைத் தருகிறார்.

தீய எண்ணங்கள் நம்மை பாவத்திற்குட்படுத்தும். இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகள் புறப்பட்டு வரும் (மத்தேயு *15:19*). பாவங்களை நாம் செய்வதினால் மாத்திரமல்ல, பாவத்தை சிந்திக்கும்போதே நாம் தீட்டுப்படுகிறோம். நம் இருதயத்திலுள்ள எண்ணங்கள் சுத்தமாயிருந்தால், நம் வாழ்க்கை முழுவதும் சுத்தமாயிருக்கும். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் (மத்தேயு *5:8*). அநேகர், வெளிப்பார்வைக்கு பரிசுத்தமாகக் காணப்படுவார்கள். ஆனால், அவர்கள் உள்ளம் தீமையால் நிறைந்திருக்கும் (கொலோசெயர் *3:1-2*). நம் எண்ணங்கள் பரிசுத்தமுள்ளவைகளாக இருக்கவேண்டும். நம் சிந்தனைகளை, சொற்களை பாவத்தில் விழாதபடி நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நம் எண்ணங்களில் தூய்மை காணப்படவேண்டும். எண்ணங்கள் தூய்மையாக இருந்தால்தான், சொற்களும் செயல்களும் தூய்மையாக இருக்கும். கர்த்தர், நம் எண்ணங்களை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்வோடு நாம் வாழ வேண்டும். தீய நோக்கம் பாவமாம்.

நாம் எவற்றை பார்க்கிறோம், படிக்கிறோம், கேட்கிறோம் என்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இக்காரியங்கள்தான் நம் சிந்தனையை தீட்டுபடுத்தும்.

மனிதர்களின் அந்தரங்கங்களையும், கர்த்தர் நியாயந்தீர்ப்பார் (ரோமர் *2:16*). யார் நம் நினைவுகளை அறிவார்? மனதிற்குள்தானே நினைக்கிறோம். நம் மனதிற்குள் நினைப்பது யாருக்கு தெரியப்போகிறது என்று நினைக்கலாம். தேவன் மறைவான எண்ணங்களுக்கும் தீர்ப்பளிப்பார். நியாயத்தீர்ப்பு நாளில் நம் மனதுக்குள் இருக்கும் மறைபொருட்கள் வெளிவரும். ஆதலால் நமது சிந்தனைகளைக் குறித்து கவனமாயிருப்போமாக. அசுத்தமான சிந்தனைகள் நமக்குள் வராதபடி நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நம்மை மூடி மறைத்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய சிந்தனைகள் எவ்வாறு இருக்கிறது என்று ஆராய்ந்து பார்த்து, நம்மை சரி செய்து கொள்வோம்.

## நினைவுகளை நியாயந்தீர்க்கும் வார்த்தை

**தேவனுடைய வார்த்தையானது.. இருதயத்தின் நினைவுகளையும்**
**யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.**

**- எபிரெயர் 4:12**

தேவனுடைய வார்த்தையை நாம் தியானிக்கும்போது, அவருடைய

வார்த்தை, நம்முடைய இருதயத்தின் யோசனைகள், எண்ணங்கள் நன்மையானவையா? அல்லது தீமையானவையா? என்பதை சுட்டிக் காட்டும். ஒரு தராசுக் கல்லைப்போல, துல்லியமாக நம் எண்ணங்களை நாம் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு நிதானித்து அறியலாம். இதையே அப்போஸ்தலனாகிய பவுல் இப்படிக் கூறுகிறான்.

> **அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர் களாயிருக்கிறோம்.**
>
> **- 2 கொரிந்தியர் 10:5**

நம்மோடு தர்க்கிக்கும் யாரோடும் நாம் தர்க்கிக்கக் கூடாது. தேவனுடைய வார்த்தை அந்த சூழ்நிலையில் நாம் எப்படி நடக்க வேண்டுமென்று சொல்லுகிறதோ அப்படி நடக்க வேண்டும். நம் சுயத்திற்கு இடங்கொடுக்கக்கூடாது. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது (பிலிப்பியர் 2:5) என்ற வார்த்தையின்படி, இயேசு கிறிஸ்துவைப் போல நாம் சிந்தித்து, செயல்பட வேண்டும். அவர் எப்படி தாழ்மையாக இருந்து, அன்பை வெளிப்படுத்துபவராகக் காணப்பட்டாரோ அப்படியே நாமும் இருக்க வேண்டும்.

சிலர் எப்பொழுதும் எதிர்மறையான எண்ணங்களில் நிறைந்து சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். தங்களுக்கு ஆபத்து நேரிட்டு விடுமோ, நோய்கள் வந்து விடுமோ என்றும், பிள்ளைகள் படிப்பில் தோல்வி அடைந்து விடுவார்களோ, கெட்ட நண்பர்களோடு சேர்ந்து விடுவார்களோ, பிள்ளைகளுக்கு ஏதாவது ஆகிவிடுமோ, இருக்கிற வேலை போய்விடுமோ, பணப்பற்றாக்குறை வந்துவிடுமோ என்று வீணாக எதையாவது சிந்தித்து எப்பொழுதும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். உலகத்தில் நமக்கு உபத்திரவங்கள் உண்டு. ஆனாலும், திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். பிரியமானவர்களே, வீணான சிந்தனைகளுக்கு இடங்கொடுக்காதீர்கள். இந்த உலக வாழ்க்கையில் நாம் பல தேவைகளோடு கூட இருக்கலாம். உபத்திரவங்கள் மற்றும் போராட்டத்தின்





மத்தியில் நாம் இருக்கலாம். அதற்காக நாம் கவலைப்படாமல் ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினால் தேவனுக்கு நம் பாரங்களை, கஷ்டங்களை, வேதனைகளை தெரியப்படுத்த வேண்டும். நிச்சயமாக நம் ஜெபத்திற்கு தேவன் பதில் தருவார். நம் தேவைகளை தேவனுக்கு தெரியப்படுத்தும் போது, அவருடைய சமாதானத்தினால் தேவன் நம்மை நிரப்புவார். தேவனுடைய சமாதானம், நம் இருதயத்தையும், சிந்தையையும், இயேசு கிறிஸ்துவுக்குள் பாதுகாக்கும். தேவன் தரும் சமாதானம் மிக உயர்ந்தது. நம் மனுஷ அறிவினால் புரிந்து கொள்ளமுடியாது. அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறான்:

> **கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.**
>
> **- பிலிப்பியர் 4:8**

நாம் எவற்றை சிந்திக்கிறோமோ அவைகள்தான் வார்த்தையாக, செயல்களாக வெளிப்படும். ஆகையால் நல்லவற்றையே சிந்திப்போம். நல்லவற்றையே செய்வோம். நல்லவற்றையே பேசுவோம். இயேசு கிறிஸ்து எப்படி சிந்தித்தாரோ அப்படியே சிந்திப்போம். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக மாம்சத்தில் வந்த தேவனாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து எப்படி வாழ்ந்தாரோ அப்படியே நாமும் வாழ்வோம். இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களோடு இருப்பதாக.

✧ ✧ ✧

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. | 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. | 2000/- |

S.PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் :** S.PAULRAJ KENNEDY

ICICI **வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

**உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்**

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com**

இணைய தளம் : **www.kennedyministries.org**




# ஜெர்ரி ஸாவில்

**www.jerrysavelle.org**

- கர்த்தர் தம்முடைய தயவால் உங்கள் வாழ்க்கையில் என்ன செய்ய முடியும் என்பதற்கு எல்லை கிடையாது.

- கர்த்தர் நமக்கு சொல்வது: அவருக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்கும்போது, நிச்சயமாக நம் நாட்கள் செழிப்பானதாகவும், நம் வருஷங்கள் ரம்மியமானதாகவும் இருக்கும். இதில் சந்தேகமே இல்லை.

- ஒரு விசுவாசி, கர்த்தருடைய வார்த்தையை பேசுகிற அந்தக் கணமே தூதர்கள் அதைக் கேட்டு, தங்களுக்குப் பணி கொடுக்கப்பட்டதை அறிந்து கொள்கிறார்கள். அவர்கள் கேள்வி கேட்பதில்லை. அவர்கள் அதைச் செய்யலாமா, வேண்டாமா என்று முடிவு செய்வதற்கு அவர்களுக்கு உரிமையில்லை. தேவதூதர்கள், கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற கட்டளையைக் கேட்டு, அதைச் செய்யவே இருக்கிறார்கள் என்று நமக்குத் தெரியும். ஆனால், நம்முடைய நிலை என்ன? நாம், கர்த்தருடையக் கட்டளையைப் பேசும்போது நடப்பது என்ன? தேவதூதர்கள், கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதுபோல நம் கட்டளைக்கும் கீழ்ப்படிவார்களா? எபிரெயர் ***1:14*** சொல்லுகிறது: அவைகளெல்லாம் பணிவிடை ஆவிகள் என்று. அவர்கள் தேவனுக்கு மாத்திரமல்ல, நமக்கும் பணிவிடை செய்கின்றவை. கர்த்தருக்கு, நாம் மன ரம்மியமாய் இருக்க வேண்டுமென்பது விருப்பமாய் இருக்கும்போது, தேவதூதர்களுக்குத் தடையென்ன?

- சிலர் சொல்கிறார்கள்: கர்த்தர், வியாதியையும், நோயையும் நமக்கு தந்து படிப்பிக்கிறார் என்று. ஆனால், கர்த்தருடைய வேதத்தில் அப்படி இல்லை. இயேசு கிறிஸ்து, தங்களுடைய நோயைக் குணப்படுத்த வேண்டி கேட்ட யாரிடமாவது, ‘‘தேவன் உனக்கு பாடம் கற்பிப்பதற்காக இந்த நோயை வியாதியை உன்னில் அனுமதித்திருக்கிறார். அதனால் நான் உன்னை சுகப்படுத்த முடியாது’’ என்று எங்கேயாவது சொல்லியிருக்கிறாரா? இல்லை. சிலர் சொல்கிறார்கள் : நோயை நம்மில் அனுமதிப்பதன் மூலம் கர்த்தர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார் என்று. இல்லை. நம்மை சுகப்படுத்துவதன் மூலமே அவர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார். அப்படி நோயை நம்மில் அனுமதிப்பதன் மூலம் கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது என்றால், நாம், எல்லா மருந்து கண்டுபிடிக்கும் விஞ்ஞான ஆராய்ச்சிகளையும் நிறுத்தியாகவேண்டும். எல்லா மருத்துவமனைகளும் மூடப்படவேண்டும். கர்த்தருடைய சித்தம், நம்மை குணப்படுத்துவதே.



- விசுவாச வாழ்க்கை என்பது என்ன? யார், தனக்குக் கர்த்தர் கொடுத்ததைவிட்டு பின்வாங்காமலும், விட்டுவிடாமலும் இருக்கிறார்களோ அவர்களுடைய வாழ்க்கையே. தனக்கு கிடைக்கவேண்டியது கிடைக்காது என்று நினைத்து மற்றொன்றை தேடுவது விசுவாச வாழ்க்கை அல்ல. தனக்கு கொடுக்கப்பட்டதை அடையும்வரை அதில் விடாப்பிடியாய் இருப்பதே விசுவாச வாழ்க்கை. கர்த்தர் நமக்கு விசுவாசத்தைக் கொடுப்பது, நமக்கென்று அவர் வைத்திருக்கும் சுதந்திரத்தை நாம் பெற்றுக் கொள்ளவே. நாம் பின்வாங்குவது என்பது நம் சுதந்திரத்தை நாம் அசட்டை பண்ணுவதாகும்.

- ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் மாத்திரம் போதாது. அதற்காக சிரமப்படவும் தயாராக இருக்க வேண்டும். நல்ல போராட்டத்தைப் போராடத் தயாராகுங்கள். உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்துக்கள், செயல்படுங்கள்.

- கர்த்தருடைய பிரசன்னத்தில் நீங்கள் இல்லையென்றால் நிச்சயமாக புத்துணர்வை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியாது. அவருடைய பிரசன்னத்தைத் தாகத்தோடு தேடுபவர்களுக்கே அவருடைய பிரசன்னத்தைத் தருவார். தேடாதவர்களுக்கும் கிடைப்பது அல்ல கர்த்தருடைய பிரசன்னம் என்பது. கர்த்தரை நெருங்கி கிட்டிச் சேருவது என்பது சுலபமானதே. சில மனுஷர்களை நீங்கள் கிட்டி நெருங்குவது சிரமமாக இருக்கலாம். எந்த வேளையிலும் நீங்கள் கர்த்தரை நெருங்கலாம். அவருடைய சிங்காசனத்தை எட்ட முடியாதபடிக்கு எந்த தடுப்பும் கிடையாது. பல கோடிக்கணக்கான ஜனங்களை பார்த்தபிறகே உங்களிடம் வருவார் என்று இல்லை. நீங்கள் தேடும்போதே நெருங்கி வருவார். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை இன்றே பெற்றுக் கொள்ளுங்கள். உடனடியாக அவருடன் ஐக்கியம் கொள்ளுங்கள். வேதத்தின் மீது ஆர்வம் கொள்ளுங்கள். அதற்காக ஜெபியுங்கள். உங்களை பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள். உள்ளார்ந்த மனுஷனில் பரிசுத்தமாக இருங்கள். ஜெபத்திலும் விண்ணப்பத்திலும் தரித்திருங்கள்.

- ஏற்கனவே ஒருவர் செய்ததையே நாமும் செய்ய விரும்புகிறோம்.புதிதாக எதையாவது செய்ய நாம் விரும்புவதில்லை. ஏனென்றால், அதற்கு சிரமப்பட வேண்டும். உங்களுக்குக் கர்த்தர் கொடுக்கிற வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள். புதிய இடம், புதிய வேலை, புதிய மனுஷர்கள் என்று வரும்போது, தயங்காதீர்கள். கர்த்தர், உங்களைக் கொண்டு புதிய காரியத்தைச் செய்வார்.

- நாம், ஒரு காரியத்தை எப்படி பார்க்கிறோம் என்பது மிகவும் முக்கியம். நமது செயல்கள் அதின் அடிப்படையிலேயே இருக்கும்.

- கர்த்தரைக் குறித்து ஆழமான காரியங்களைத் தெரிந்து கொள்ள விருப்பப்படுகிறீர்களா? கர்த்தர் தரும் ஆலோசனைகளைப் பெற வாஞ்சிக்கிறீர்களா? அப்படியென்றால், மாம்ச சிந்தையை உங்களைவிட்டு எடுத்துப் போடுங்கள். அப்பொழுது இயேசு கிறிஸ்து என்னவெல்லாம் உங்களோடு பேச விரும்புகிறாரோ எல்லாவற்றையும் உங்களோடு பகிர்ந்து கொள்வார். நாம் குறைவான பாத்திரமாக இருந்தால், அவர் நம்மோடு இடைபட முடியாது. பரிசுத்தமான பாத்திரமாக இருந்தால் மாத்திரமே அவரிடமுள்ள எல்லாவற்றையும் அவரால் நம்மிடம் பகிர்ந்து கொள்ள முடியும்.



பாகம்
02

# ஜெபம்

**எஸ்.பால்ராஜ் கென்னடி**

**ந**ம்முடைய எல்லா ஜெபங்களுக்கும் பதில் கிடைக்கிறதா? 'இல்லை' என்பதுதான் பதில். நாம் ஒரு விருப்பத்தை நிறைவேற்றும்படியாகக் கர்த்தரை நோக்கி ஜெபிக்கிறோம். அது நமக்கு பிற்காலங்களில் துன்பத்தைத் தருவதாக இருந்தால், கர்த்தர், அதை நமக்கு நிறைவேற்றித் தரமாட்டார். அதற்கு ஒரு சிறு உதாரணம்: ஒரு சிறு பிளளை தன் தாயிடம் இரவு 11 மணிக்கு ஐஸ்கிரீம் சாப்பிடக் கேட்டால், தாய் தருவாளா? தரமாட்டாள். ஏனென்றால் அந்த இரவு நேரத்தில் குளிர்ச்சியான ஐஸ்கிரீம் அந்த பிள்ளைக்கு ஜலதோஷத்தைக் கொண்டு வரும். அதன்பின்னர் காய்ச்சல் வரும், அந்த பிள்ளை கஷ்டப்படும். அதனால் அந்தப் பிள்ளையின் நலன் கருதியே அந்த ஐஸ்கிரீம் மறுக்கப்படுகிறது. நம் தேவன் நம்மேல் வைத்துள்ள அன்பு ஒப்பற்றதாகும். அதற்கு ஈடு இணையான அன்பு இந்த உலகத்தில் கிடையாது. இயேசு என்றாலே இயேசுவின் அந்த ஈடு இணையில்லாத அன்புதான் நம்மை ஆட்கொள்கின்றது.

இதுவரை உங்கள் ஜெபத்திற்கு பதில் கிடைக்கவில்லையென்றால் சோர்ந்து போகாதிருங்கள். இயேசு கிறிஸ்து உங்கள்மேல் வைத்திருக்கிற அன்பு உங்களைவிட்டு நீங்கிப் போகவில்லை. அவர் உங்களை மறந்துவிடவில்லை. நீங்கள் அவரை மறந்து போனாலும், அவர் உங்களை மறக்கவில்லை. அவர் மனுஷன் அல்ல; தேவன்.

மற்றொரு காரியம்: நமக்கென்று கர்த்தர் நியமித்திருக்கும் நன்மை நமக்கு கிடைக்கும்வரை அதற்கு பதிலாக வேறொரு நன்மையை நாம் பெறாதபடி தடுத்து வைப்பார். சில பெற்றோர் தங்களுடைய மகளுக்கு ஏற்ற மணமகனைத் தேடுவார்கள். அநேகர் வந்து அவர்களுடைய மகளைப் பார்த்து செல்வார்கள். ஆனால், எதுவுமே அமையாது. உடனே சோர்ந்து விடுவார்கள். ஒன்றை புரிந்து கொள்ளுங்கள். உங்களுடைய மகளுக்கு என்று ஒரு புருஷனை கர்த்தர் ஏற்கனவே



> **"வேதத்தை படித்து கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொண்டு, அதன்படி (நாம் தைரியமாய் கிருபாசனத்தண்டை கிட்டிச் சேர்ந்து) ஜெபித்து, நம் பரம தகப்பனிடமிருந்து நமக்கென்றுள்ள எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்வோம்."**

உருவாக்கி வைத்திருக்கிறார். அந்த பையன் உங்களைத் தேடிவரும் வரை மற்றக் கதவுகளை கர்த்தர் அடைத்து வைப்பார். அதை ஒருவராலும் திறக்க முடியாது.

நாமாக நம்முடைய பிள்ளைக்கு ஒரு துணையாக யாரையேனும் நியமிக்க முடியாது. இப்படி நாமாக ஒரு காரியத்தைச் செய்வதற்காக ஜெபிக்கும்போது கர்த்தர் பதில் தரமாட்டார்.

நம்மை ஆசிர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம் (எண்ணாகமம் 24:1). ஆசீர்வாதத்திற்கு நேராகச் செல்லாமல் நாம் திசைமாறும்போது தடுத்து நிறுத்துவார், நம் பரம தகப்பன்.

நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு துணையைத் தேடும்போது, உருவம், நிறம், பதவி, படிப்பு, வருமானம் இவைகளைப் பார்ப்போம். ஆனால், கர்த்தர் பார்ப்பதோ வெளிப்புறத்தை அல்ல. அவர் ஒருவனுடைய இருதயத்தைப் பார்க்கிறார் (1 சாமுவேல் 16:7). உள்ளார்ந்த மனுஷி / மனுஷனின் குணத்தைப் பார்க்கிறார். எதிர்காலத்தில் அவர்கள் எப்படி இருப்பார்கள் என்று பார்க்கிறார் (அது அவருக்கு மாத்திரமே தெரிந்ததொரு காரியம்). அதனால்தான் தேவ சித்தம் அறிந்து அதன்படி நாம் நடப்பது அவசியம். வேதத்தை இரவும் பகலும் தியானிப்பது அவசியம். நீங்கள் யோசிக்கலாம் : தானியேல், யோசேப்பு, தாவீது இப்படிப்பட்ட தேவ மனிதர்களைப் பற்றி அதில் இருக்கிறது. என் மகளைப் பற்றி, மகனைப் பற்றி அதில் இல்லையே என்று. அதற்காகத்தான் கர்த்தர், தம்முடைய பரிசுத்த ஆவியினால் நம்மை நிரப்பி அபிஷேகிக்கிறார். அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்கு போதிக்கும் (1 யோவான் 2: 27). வேதத்தில் புதைந்துள்ள இரகசியங்களை, உங்களது மகளுடைய, மகனுடையக் காரியங்களைக் கர்த்தருடைய ஆவியானவர் உங்களுக்குச் சொல்லுவார். வேதமும் அவசியம், அபிஷேகமும் அவசியம். பரிசுத்த ஆவியானவர், வேதத்தின் வார்த்தைகளுக்குள் மறைந்திருக்கும் எல்லாக் காரியங்களையும் உங்களுக்கு வெளிப்படுத்துவார் (1 கொரிந்தியர் 2:13).

வேதத்தை படித்து கர்த்தருடைய சித்தத்தை அறிந்து கொண்டு, அதன்படி (நாம் தைரியமாய் கிருபாசனத்தண்டை கிட்டிச் சேர்ந்து) ஜெபித்து, நம் பரம தகப்பனிடமிருந்து நமக்கென்றுள்ள எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்வோம்.

- தொடரும்